சித்தம்

மாலை 3 | திருவள்ளுவர் ஆண்டு 1999 ஆனி—ஜூலை 1966 | மணி 9

# இருட்டில் வெளிச்சம்

இந்திய மருத்துவ மாநிலக் குழுக்களின் பேரவை (Council of State Boards and Faculties of Indian Medicine) பாரதத்தின் தலை நகராகிய புது டில்லியில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும், இப்பேரவையின் சிறப்புக் கூட்டம் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரில் கூடுவது வழக்கம். தமிழக அரசினரின் அழைப்பின் காரணமாக, சென்ற ஜூன் மாதம் 15, 16, 17ம் தேதிகளில் சென்னையில் கூடியது. கூட்ட நடவடிக்கைகளின் சுருக்கத்தை இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இப்பேரவைக் கூட்டத்திற்கு பல மாநிலங்களின் பிரதிநிதிகள் தவிர, தமிழகத்திலுள்ள பிரபல வைத்தியர்களும் வருகை தந்தது மகிழ்ச்சிக்குரியதாகும். ஆயினும் நம் வாசகர்கள் பலருக்கு, இப் பேரவை (Council) யைப் பற்றிய முழு விவரங்கள் தெரிந்திருக்க முடியாது. இந்த கவுன்சில் 1952-ல் நிறுவப்பட்டது. பொதுவாக, இந்திய வைத்திய முறைகள் வளர்ச்சியடையச் செய்வது, ஆராய்ச்சி செய்வது போன்ற துறைகளில் ஊக்கங் காட்டுவதுடன், மக்கள் உடல்நலம், சுகாதாரம் முதலியவற்றில் இந்திய மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவது, வைத்தியத் தொழில் செய்பவர்களுடைய குறைகளை நிவர்த்திப்பது, நலனை பாதுகாப்பது, மருத்துவ நீதியை நிலைநாட்டுவது, இவைகளுக்காக தொண்டாற்றுவது இவைதான் கவுன்சிலின் முக்கிய நோக்கங்கள். ஒவ்வொரு மாநிலத்தினின்றும் பிரதிநிதிகள் இக்கவுன்சிலில் உறுப்பினர்களாயிருக்கிறார்கள். மாநிலங்களிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரிகளின் பிரதிநிதிகள், ஆராய்ச்சிக் குழுவின் பிரதிநிதிகள், இந்திய மருத்துவத் துறை நெறியாளர், மாநில மத்தியக் குழுக்களின் பிரதிநிதிகள் இவர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

பாரத நாட்டின் எல்லா மாநிலங்களிலும், தமிழகம் தவிர, ஆயுர்வேத யுனானி கல்லூரிகளும் ஆராய்ச்சி சாலைகளும், இந்திய மருத்துவ நெறியாளர்களும் (Director) போர்டுகளும் இருப்பதால் இக் 'கவுன்சிலின்

பெரும்பான்மையான இடங்களைப் பிடித்திருப்பவர்கள் ஆயுர்வேத பண்டிதர்களும், சில யுனானி ஹக்கீம்களுமாவர். தமிழகத்தில் சித்த வைத்தியம் என்று ஒன்றிருப்பதே இந்த கவுன்சிலுக்கு தெரியாமலே யிருந்துவந்தது. ஆகவே சித்த வைத்தியப் பிரதிநிதி எவருக்கும் இந்த கவுன்சிலில் இடம் கிடைக்கவில்லை. தமிழகத்தின், சித்த வைத்தியத்தின் பிரதிநிதியென்றே சொல்லிக்கொண்ட, ஆயுர்வேத பட்டம் பெற்றவர்கள் இந்த கவுன்சிலில் அங்கம் பெற்றிருந்தார்கள். இக் காரணத்தால், சித்த வைத்தியம் புறக்கணிக்கப்பட்டு அலட்சியமா செய்யப்பட்டு வந்தது. இதனல் மனக்கொதிப் படைந்த தமிழக வைத்தியர்கள் எதுவும் செய்ய முடியாத நிலையில் தவித்தனர்.

தமிழகத்திலுள்ள வைத்திய சங்கங்களும், சித்த வைத்தியப் பிரமுகர்களும், "நந்தியும்" இடையருது செய்துவந்த கிளர்ச்சியின் பயனுக, திருநெல்வேலியில், இந்திய மருத்துவக் கல்லூரி ஒன்றை தமிழக அரசினர் சென்ற ஆண்டில் தொடங்கினுர்கள். இந்திய மருத்துவ கல்லூரிக்கு, இக் கவுன்சிலுக்கு ஒரு பிரதிநிதியை அனுப்ப உரிமையுண்டு. ஆதலால், தமிழக அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியின் முதல்வர், இதில் இடம் பெற்ருர். சென்ற முறை, இக்கவுன்சிலின் (பேரவை) கூட்டம் மைசூர் மாநிலத்தின் தலைநகராகிய பெங்களூரில் நடைபெற்றது. அவ்வமயம், இக்கவுன்சிலின் அடுத்த ஆண்டுக் கூட்டத்தை சென்னை நகரில் நடத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், தமிழக அரசினரின் ஒப்புதலுடன் தமிழக அரசில் நாட்டு மருத்துவத் துறை நிர்வாக அதிகாரியாக பணியாற்றிவருபவரும், சித்த வைத்திய வளர்ச்சியிலும், ஆராய்ச்சியிலும், எல்லை கடந்த ஆர்வம் காட்டிவருபவருமான உயர் திரு. கே. சிதம்பரம் அவர்கள், விடா முயற்சி செய்தார்கள்.

இதன் பயனுகவே, பேரவைக் கூட்டம் சென்னையில், தமிழக அரசினர் ஆதரவில், சென்ற மாதம் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தின் வரவேற்புக் குழுத் தலைவர் உயர் திரு. சிதம்பரம் அவர்கள், தலைமையில் தமிழக அரசில், பதவி வகித்துவரும் நாட்டு வைத்திய பேராராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், இந்திய மருத்துவக் கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள், தமிழகத்திலுள்ள வைத்தியப் பிரமுகர்கள் முதலிய அனைவரும், ஊண் உறக்கமின்றி, சலியாத உழைப்புடன், பேரவைக் கூட்டத்தை மிகச் சிறப்பாக நடத்தினுர்கள். இவர்களுக்கெல்லாம், ஆதரவாக தமிழக சுகாதார அமைச்சர் திருமதி சோதி வெங்கடாசலம் அம்மையாரும், சுகாதாரத் துறை செயலாளர் (Secretary) பதவியிலிருந்துவரும் உயர் திரு. எஸ். கிருஷ்ணசுவாமி ஐ. ஏ. எஸ். அவர்களும், இருந்து ஊக்க மூட்டியதை நாம மறக்க முடியாது. பல மாநிலங்களிலிருந்து வருகை

தந்த பிரதிநிதிகளுக்கு, இடவசதி, உணவு வசதி, சுற்றுலா வசதி, முத லியவை அனைத்தும் சிறப்பான முறையில் செய்யப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது.

இருட்டில் வெளிச்சம் கண்டது போல், இந்த மாநாடு தமிழகத்தில் நடந்ததனுல் ஏற்பட்ட முக்கிய நன்மை என்ன வென்ருல், சித்த வைத்தி யத்தின் தொன்மையையும், சிறப்பையும், அதிலுள்ள பல அபூர்வ மருத்துவ முறைகளையும், மற்ற மாநில வைத்திய மேதைகள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. சித்த வைத்தியம் என்பது தமிழகத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்து வருவதென்ற உண்மையையும், சித்த வைத்தியத்தின் வளர்ச்சிக்காக, அதற்கு தனிப்பட்ட சுதந்திர மளித்து, உதவவேண்டுமென்ற கொள்கையையும் கவுன்சிலின் பொதுக் குழுக் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது, சித்த வைத்தியத் திற்குக் கிடைத்த பெரியதோர் வெற்றியாகும்.

தமிழகத்திற்கு பேரவைக் கூட்டம் அழைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியது.

வாழ்க சித்த மருத்துவம்.

---

# சென்னை, அடையார், நாட்டு மருந்து கூட்டுறவு உற்பத்தி நிலையம்

## நிர்வாகிகள் தேர்தல்

**1966, ஜூலை. 21-ம் தேதி, பகல் 2: மணி**

# வேண்டுகோள்

*மேற்குறிப்பிட்ட தேர்தலில், சென்னை நகரத் தொகுதியின் வேட்பாளர் தவத்திரு. சுந்தரானந்த சரசுவதி அடிகளாருக்கு உங்கள் மேலான ஆதரவளித்து சித்த வைத்தியத் துறையில் மேலும் தொடர்ந்து பணியாற்ற ஊக்கமளிக்கும்படி வேண்டிக்கொள் கிறேம்.*

# Council of State Boards and Faculties of Indian Medicine

# இந்திய மருத்துவ, மாநிலக் குழுக்களின் பேரவை

## சென்னையில் 11-வது மாநாடு

புது டில்லியை தலைமை அலுவலகமாகக் கொண்டுள்ள, இந்திய மருத்துவ, மாநிலக் குழுக்களின் பேரவையின் பதினோரா வது மாநாடு, 1966, ஜூன் மாதம் 15, 16, 17-ம் தேதிகளில் சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

15-ம் தேதி காலை 10-30 மணிக்கு, சென்னை இராஜாஜி மண்டபத்தில் தொடங்கியது. இம் மாநாட்டை தமிழக முத லமைச்சர் உயர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கி வைப்ப தாக அறிவிக்கப்பட்டிருந்தது அவசரவேலையாக அவர்கள் டில்லிக்குப் போகவேண்டி யிருந்ததால் அவர்களுடைய உரையை தமிழக சுகாதார அமைச்சர் திருமதி சோதி வெங்கடாசலம் அம்மை யார் படித்தார்கள்.

நாட்டு மருத்துவத் துறையில் தீவிரமான ஆராய்ச்சி வேலைகள் நடக்க வேண்டியதனவசியத்தை வற்புறுத்துவதாகவும், நாட்டு மருந்துகளின் தரத்தை நிர்ணயிக்க அவ்வித ஆராய்ச்சி உதவியா யிருக்குமென்றும், இதற்கு நவீன மருத்துவ நிபுணர்களும் கூட ஒத்துழைத்தால் நாட்டு மருத்துவத்திலுள்ள சில அபூர்வ மருந் துகள் மக்களுக்கு பயன்படச் செய்ய முடியுமென்றும், முதலமைச்சர் தமது அறிவுரையில் குறிப்பிட்டிருந்தார்கள்.

தமிழக சுகாதார அமைச்சரவர்கள் பேசுகையில், பாளையங் கோட்டையில் இயங்கிவரும், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி யின் வளர்ச்சியில் அரசினர் ஊக்கம் காட்டி வருவதாகவும், நாட்டு மருத்துவத்தில் சிறந்த முறையில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை தமிழகத்தில் நடத்திவருவதற்கான முயற்சிகளை அரசினர் செய்து வருவதாகவும், தமிழ் நாட்டிற்கே தனிச் சிறப்பையளித்துள்ள சித்தவைத்தியத்தை, தனியாக வளரச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டியதவசியமென்றும், சித்தவைத்திய மென்பது ஒரு தனிப்பட்ட வைத்தியமுறையென்பதை அனைவரும் ஒப்புக்கொண்டு தமிழகத்தில் அதற்கு ஆதரவு அளிக்கவேண்டிய தவசியமென்றும் சொன்னார்கள்.

சென்னை, மேல் சட்டமன்றத் தலைவர், உயர் திரு மாணிக்க வேலர், "சில வீட்டு வைத்திய முறைகள்" என்ற ஒரு சிறு நூலை வெளியிட்டு, மருத்துவப் பொருட் காட்சியையும் திறந்து வைத்தார்கள்.

தமிழக அரசினர், நாட்டு மருத்துவத் துறை நிர்வாக அதிகாரி உயர்திரு. கே. சிதம்பரம் அவர்கள், மாநாட்டிற்கு விஜயம் செய்துள்ள அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மத்திய அரசினரால் நிர்வகிக்கப்பட்டு வரும், நாட்டு மருத்துவ ஆராய்ச்சி நிலையங்களில சிலவற்றை தமிழகத்தில் நிறுவவேண்டு மென்றும், மூலிகைத் தோட்டங்கள் ஏராளமான நிலப்பரப்பில் பராமரிக்கப் படவேண்டு மென்றும் குறிப்பிட்டார்கள்.

மாநில மத்தியக் குழுவின் தலைவர் கவிராஜ். அஷுடோஷ் முஜும்தார் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நாட்டு மருத்துவ வளர்ச்சி, ஆராய்ச்சி இவற்றிற்காக மத்திய அரசாங்கம் ஒதுக்கும் நிதிகளை வேறு துறைகளில் பயன்படுத்தக் கூடாது என்று வற்புறுத்தினர்.

அன்று மாலை பேரவையின் விஞ்ஞான அரங்கு நடைபெற்றது. மதுரை பல்கலைக் கழக துணைவேந்தர் உயர் திரு. தெ. பொ. மீனட்சிசுந்தரனர் அரங்கைத் துவக்கிவைத்தார்கள்.

தமிழக சட்டமன்ற சபாநாயகர் உயர் திரு. செல்லபாண்டியன் அவர்கள், நாட்டு மருத்துவ முறைகளின் சிறப்பைப்பற்றி பேசினர்கள். 16, 17-ம் தேதிகளில் தொடர்ந்து நடைபெற்ற விஞ்ஞான, கருத்தரங்கில் பல ஆராய்ச்சி நிபுணர்கள், சீரிய கருத்துக்களை பரிமாறிக் கொண்டார்கள். பல முக்கிய தீர்மானங்கள் பேரவைப் பொதுக் குழுவில் நிறைவேறின, மாநாட்டின் சார்பில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

---

## சித்த மருத்துவக் கல்வி பாடப்புத்தக நிபுணர்குழு

### தமிழக அரசினர் உத்திரவு

திருநெலவேலி, பாளையங்கோட்டையில், தமிழக அரசினரால் 1964-ம் ஆண்டு தொடங்கப்பட்டு நடந்துவரும், இந்திய மருத்துவக் கல்லூரியில், சித்த மருத்துவ மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களைத் தயாரிக்கவும், சித்த மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி துறைகளில் அரசினருக்கு ஆலோசனை கூறவும், ஓய்வு பெற்ற பேராசிரியர்கள், சித்த வைத்தியப் பிரமுகர்கள், கல்லூரி ஆசிரியர்கள் முதலிய பதிமூன்று பேர்களடங்கிய நிபுணர் குழு ஒன்றை தமிழக அரசினர் அமைத்திருக்கின்றனர். பாளையங்கோட்டை கல்லூரியின் முதல்வர் இக்குழுவின் செயலாளர். "நந்தி" ஆசிரியர் தவத் திரு. சுந்தரானந்த சரசுவதி அடிகளாரும் இக்குழுவில் ஒரு உறுப்பினர். பேராசிரியர் க. சு. உத்தமராயன் அவர்கள் இக்குழுவின் தலைவர்.

# ஒரு நல்ல வாய்ப்பு

உங்களுக்கோ, உங்கள் குடும்பத்ினருக்கோ, நண்பர்களுக்கோ, தீராத நோயினால் துன்பம் ஏற்பட்டு, பல சிகிச்சைகள் செய்தும், பலன் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தால்—

நோயாளியின் வயது, திருமணம் ஆனவரா, குழந்தைகள் உண்டா, நோய் வந்த விவரம், காலம், செய்து கொண்ட சிகிச்சை, முதலிய விவரங்களை, தெளிவாகத் தமிழில் எழுதியனுப்பவும்.

குணம் அளிக்கக் கூடிய இலகுவான சிகிச்சை, நீங்களே மருந்தை தயாரித்துக்கொள்ள ஆலோசனை முதலிய விவரம் தபாலில் அனுப்பப்படும். சிகிச்சை முறை தெரிவிக்க கட்டணம் இல்லை. வைத்திய நிபுணருடைய ஆலோசனை இலவசம்.

ஆனாலும், எழுத்துக் கூலி, தபால் செலவு முதலியவற்றிற்காக, உங்கள் கடிதத்துடன் ரூபாய் இரண்டு மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். அங்ஙனமில்லாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

*கடிதம், மணியார்டர் அனுப்ப முகவரி:*

**வழிநடைச்சித்தன்**

C/o "நந்தி" பதிப்பகம்

9, கஜபதி நாயுடு தெரு, சென்னை - 30

# நோயாளியின் பரிசோதனை

(டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி ஐ. எம்.
பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி முதல்வர்)

நோயுற்றோனை பரிசோதனை செய்ய தனிமையான விசாலமுள்ள ஒரு அறை தேவை. அவ்வறை எவ்வாறு இருத்தல் வேண்டும் எனபதைச் சொல்லும்போது மிக்க விவாதத்திற்கு இடமாகும். இவ்வறை மருத்துவனின் பொருளாதார சூழ்நிலையை பொருத்து இருப்பதால் இங்கு அவசியமானதொரு அறையை குறிப்பிடப்படுகிறது.

ஆகவே, நன்றாக காற்றோட்டமுள்ள விசாலமான வெளிச்சமுள்ள அறையாய் இருத்தல் வேண்டும். நோயாளி அவ்வறையில் நுழையும்போதே களிப்பைத் தரும்படியான சூழ்நிலைகள் பொருந்தியிருக்கவேண்டும்.

நோயுற்றோனை சோதிக்க பொதுவாக அவன் ஆடைகளையெல்லாம் கழற்றி விடவேண்டும், என்றாலும் சில நோய்களில் (சுரம், குளிர், நளிர் முதலியன) கம்பளிப் போர்வையை அணிவித்து காலதாமதம் செய்யாமல் சோதிக்கவேண்டும். அவசியமான உறுப்புகளை நிதானித்தால் போதும். நோயாளனை பரிசோதிக்க நீண்டதொரு விசுப் பலகையின்மேல் கிடத்தி பரிசோதிக்க வேண்டும். பொருள் வசதியுள்ளவர் பஞ்சணை கட்டிலில் நோயாளனை பரிசோதிக்கலாம். சில நோயாளிகளை நாற்காலியிலேயே உட்கார வைத்து சோதனை செய்யலாம் மேற்சொன்னவைகளில் குறைபாடுகளிருந்தால் நோயாளியினுடைய குறி குணங்களை கணிப்பதற்கு அவகாசமில்லாமல் போவதுமன்றி மருத்துவனுடைய கடமைக்கு பொருத்தமற்றதுமாகும்.

பரிசோதனை அறை மிகவும் நிசப்தம் உள்ளதாக இருக்க வேண்டும். நோயுற்றோனை பரிசோதனை செய்யும் காலங்களில் மருத்துவன் தன் நண்பரோடும் சுற்றத்தாரோடும் அளவளாவி இருத்தல் கூடாது. நோயுற்றோனை பரிசோதிக்க மறைவிடம் முக்கியமாகவும் அத்தியாவசியமானதாகவும் கருதவேண்டும். மற்றவர்களின் முன்னதாக நோயாளனை பரிசோதிப்பது மிகவும் தவறு. மலவாய் நோய், மூலநோய், பவுத்திரம் ஆகிய நோயுற்றோனை மறைவிடத்தில்தான் பரிசோதிக்க வேண்டும் அதிலும் பெண்களானல் அப்பெண்ணின் கணவனை அருகில் வைத்துக்கொண்டு மறைவிடத்தில் பரிசோதிக்கத் தொடங்கவேண்டும். அல்லது நோயுற்றோளின் சுற்றத்தாராகிய மற்றொரு பெண்ணையாகிலும் வைத்துக் கொண்டு பரிசோதிப்பது மிகவும் அவசியம். அதேமாதிரியாக குழந்தைகளையும் சிறுவயதினரையும் பரிசோதிக்க தாய் தந்தையர்கள் தேவை.

நோயுற்றோன் உடற் உறுப்பின் பரிசோதனை சாதாரணமாக ஐந்து பிரிவுகளில் அடங்கும்.

1. பார்வைத் தேர்வு.
2. உள்ளங்கைத் தேர்வு.
3. விரலடித் தேர்வு.
4. செவிபுலன் கருவித் தேர்வு.
5. நாடி.

மருத்துவத்தில் மிகவும் தேர்ச்சிபெற்ற மருத்துவன் நோயாளன் சோதனை அறைக்குள் நுழையும்போதே பார்வைத் தேர்வை துவக்கி விடுகிறுன். நோயாளியின் குறி குணங்களை குறிப்பேட்டில் குறித்துக் கொண்டே மற்ற தேர்வுகளை சர்வ சாதாரணமாக நோயாளன் அறையை விட்டு போவதற்குள் முடித்துவிடுகிறுன். ஆனுல் அங்காதிபாத பரிசோதனை செய்ய அதிக நேரம் ஆனுலும் நோயின் கணிப்பு பிரமாதமாகவும் சிறப்பாகவும் பரிகார நடையில் பெரிதும் பயனளிக்கும். இதனுல் என்ன தெரியக் கிடக்கிறதென்ருல் மருத்துவன் நோயாளனை ஆரம்பத்திலிருந்து நோயின் குறி குணங்களை நன்ருகவும் ஒழுங்காகவும் உருக்கமாகவும் கவனித்து கணிக்கின்ருன்.

நோயாளன் சோதனை அறைக்குள் நுழைந்ததும் மருத்துவன் கவனிக்கவேண்டியது கீழ்வருமாறு :—(1) அறைக்குள் எவ்வாறு நடந்து வருகிறுன்—உட்கார்ந்தா? படுத்துக்கொண்டா? நின்று கொண்டா? பிறர் உதவியால் நடந்துகொண்டா? (2) உடை—சுத்தமான உடையா? (3) வாய்மொழி—பேச முடிகிறதா? குளறின பேச்சா? தெளிவான பேச்சா? (4) பதில் அளிக்கும் விதம் (5) அறிவு (6) மனேவிகாரம் முதலியவைகளை ஆராய்தல் வேண்டும்.

(7) அவன் எவ்விதமான மனிதன்? (8) அவன் போக்கு என்ன? (9) அவன் என்ன நினைக்கிறுன்? (10) அவன் என்ன உணருகிறுன் (11) சந்தோஷமாக யிருக்கிறுனு? (12) அவாவோடு இருக்கிறுனு? அவன் அவா, நோயிக்கு தக்க அளவிலிருக்கிறதா? அதிகமா?

மேற்சொன்ன கேள்விகளுக்கு பதிலை ஊகிப்பது மருத்துவனுக்கு மருத்துவன் வித்தியாசப்படும். ஆகையால் மருத்துவ மாணவர்கள் பயிற்சியில் இக்கேள்விகளுக்கு தங்கள் அனுபவத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவனிடத்தில் தெரிந்துக்கொள்வது அவசியம். புத்தக மூலமாய் தெரிந்துக்கொள்வது அவ்வளவு எளிதல்ல.

படுக்கையில் கிடத்தியுள்ள நோயாளனை கவனிக்கவும். அவன் எவ்வாறு படுத்திருக்கிறுன். சாதாரணமாக மனிதன் சுகமாக இருக்கும்போது அவனிஷ்டம்போல் படுத்துக்கொள்கிறுன். அவன் அநேகமாக எவ்வாறு படுத்தால் தனக்கு சுகம் அளிக்கிறதோ அவ்வாறே படுத்துக்கொள்வான். ஆனுல் நோயுற்ருேனே அவ்வாருக செய்ய முடியாமல் அந்நோய்க்கு கட்டுப்பட்டதொரு நிலையில் படுத்துக்கொண்டிருப்பான்.

சில சுரநோய்களில் உறுப்புகளை அசைக்காமல் படுத்திருப்பான். குளிர் சுரத்தில் முடக்கி படுத்திருப்பான். நெடுநாள் நோயினால் அடிபட்டு பலக் குறைவினால் துவண்டு கிடப்பான். எழ முயன்றாலும் மறுபடியும் துவண்டு விழுவான். சாதாரண சுவாசம் விடுவதும் கூட பெருமூச்சாக யிருக்கும்

இருதய நோயிலும் சாச நோய்களிலும் நோயாளன் தலை அணையின்மேல் தலையை வைத்து உட்கார்ந்த நிலையிலிருப்பான். அல்லது முதுகை நிற்கின்ற பலகையின் மேலோ தலை அணையின் மேலோ சார்ந்து உட்கார்ந்திருப்பான்.

தொந்தி நோய்களில் நோயாளன் அண்ணாந்தே படுத்திருப்பான். அசைந்தால் தொந்தியில் வலிக்குமே என்று பயந்து அசையாமல் நிம்மதியாக படுத்துக் கொண்டிருப்பான். சில வேளை, ஒரு காலையோ இரண்டு காலையோ மடக்கி அண்ணாந்து படுத்திருப்பான்.

குடல் வாயுவில் நோயாளன் புரளுவான். நிம்மதியாக யிருக்க மாட்டான். எந்தவிதமாக படுத்தால் வலி யில்லாமலிருக்கும் என்றே பார்ப்பான். பக்க சூலையில் வலியிருக்கும் வரையில் புரண்டுகொண்டே யிருப்பான்.

சந்துவாத ஆமவாத கோயில் நோயாளன் என்ன முயன்றாலும் உடல் உறுப்பினங்கள் பயன்படவில்லையே என்ற சோக மனப்பான்மையோடு படுத்திருப்பான். பார்ப்பதற்கு பரிதாபகரமாக இருக்கும். அசைவற்று படுத்திருப்பான் மூட்டுகள் வீக்கத்தினால் கொஞ்சம் அசைத்தாலும் முது வலி காணும். வாதநோய்களிலும் நரம்பு நோய்களிலும் பற்பல விதங்களாக படுத்திருப்பான். வாத சுரத்தில் தலை பின்னுக்கு முதுகுபக்கமாக இழுத்து வளைந்திருக்கும், தலை அணையில் மிகு பள்ளம் விழுந்திருக்கும்.

எனவே நோயாளன் படுத்திருக்கும்போது சோதிப்பதை கவனிப்பது மல்லாமல் அவன் உட்கார்ந்த நிலையையும் நடக்கும் நிலையையும் கவனித்தல் வேண்டும். இதனால் நோயை நன்றாக கணிப்பதற்கு வழியுண்டு. முக்கியமாக நோயாளன் நேராக நிமிர்ந்த நிலையில் இருக்கும்போதுதான் நோயை நன்றாக நிதானிக்க முடியும். உதாரணமாக பாரிசவாயு நோயில் காலை தரையில் தேய்த்து தூக்கி நடந்துகொண்டும் நடுக்குவாதத்தில் கை மாத்திரையை உருட்டுவது போன்ற பாவனையோடு அசைந்தும் அல்லது நடுக்கலோடும் நிம்மதியற்ற முக பாவத்தோடும் வருவான்.

நோயாளன் நிற்கும்போது (1) தலையின் தோற்றம்—முகத்தின் விசாலம் (சந்தோஷம்; வேதனை; நிம்மதியில்லாமை, கோபம்; துக்கம்; துன்பம்; சுருக்கம்; போன்ற முகங்கள் (2) தோள்கள் (3) முதுகு—வளைவு; வலி. (4) கைகள். (5) கால்கள் ஆகியவைகளை உற்றுக் கவனித்தல் வேண்டும். (தொடரும்)

# நெல்லி முள்ளி

(சித்தவைத்தியர் அ. மாணிக்கவாசகம், சென்னை)

நெல்லி முள்ளி என்பது உலர்ந்த நெல்லிக் காயாகும். இவை காட்டு நெல்லி, கீழறி நெல்லி, கீழா நெல்லி, கீழ்க்காய் நெல்லி, சிலநெல்லி என ஐந்து வகைப்படும். நாம் எடுத்துக் கொள்ளும் நெல்லி, காட்டு நெல்லி வகையைச் சேர்ந்ததாகும். இதன் உபயோகங்களை தேரையர் பின்வருமாறு கூறுகிறார்.

ஆவன லஞ்சிய சிர்க்கென்பு ருக்சி கண்ணோய்
தாக முதிரபித்தந் தாதுகட்டம்-மே கனத்தி
நெல்லி முள்ளி போலருக வெண் கா மிய வியங்க
நெல்லி முள்ளி யாற் போ கினே.
நல்ல நெல்லி முள்ளியது நாவுக் குரிசைதரு
மல்லல் விரி பித்த மகற்றுமதை-மெல்லத்
தலை முழுகக் கண் குளிருந் தாவுபித்த வாந்தி
யிலை யழி மே கங்களும் போ மெண்.

இதன் பொருள்: நாவுக்கு ருசி தராநின்ற நெல்லி முள்ளியால் உட் சூடு, சோம ரோகம், மாதர்கள் ருது தோஷம், விந்து க்ஷீணம், மூத்திர அருகல் ஆண் குறிக் கொப்பிளம், பயித்தியம், பித்த வாந்தி, பிரமேகம் ஆகிய இவைகள் விலகும். இதை சிரசுக்கிட்டு முழுக நேத்திரங் குளிரும்.

இவற்றை பல விதமான முறைகளாக தனி மருந்தாகவும் மற்ற மருந்துகளுடனும் கலந்து உபயோகிக்கலாம். பல விதமான வியாதிகளையும் குணப்படுத்தலாம். இவற்றுள் முக்கியமாக இரண்டு முறைகளாக உபயோகிக்கலாம்.

**1. கல்பம்:** நெல்லி முள்ளி பலம் $\frac{1}{4}$, கஸ்தூரி மஞ்சள் பலம் $\frac{1}{4}$ கடுக்காய் பலம் $\frac{1}{4}$ சீரகம் பலம் $\frac{1}{4}$ மிளகு பலம் $\frac{1}{4}$ இவைகளை சுத்தமானதாக எடுத்து, நோயற்ற பசுவின் பாலால் மெழுகுபட அரைத்து ஷை பாலில் குழைத்துக் காலை 7 மணிக்கு சரீரம் முழுவதும் தேய்த்துக் கொண்டு அப்படியே ஒரு மணி நேரம இருந்து ஆறிய இளம் வெந்நீரில் ஸ்நானம் செய்து, புளிலைய நீக்கிய ஆகாரம் செய்து கொண்டு வர வேண்டும். இவ்விதம் வாரத்துக் கொரு முறையாக சிலகாலம் செய்துவர மயக்கம், அயர்வு, ஞாபகக் குறைவு, கண் கூச்சம், நாக்கு அரோசிகம், பித்த நரை பூச்சி வெட்டு, உரோமம் உதிர்தல் முதலியவை நீங்கும்.

**2. தைலம்:** 40 பலம் நெல்லி முள்ளியை இடித்து ஓர் மண் பாத்திரத்தில் போட்டு அதில் 16 படி சலம்விட்டு, 3 நாள் ஊற வைத்திருந்து, பிறகு அடுப்பேற்றி இரண்டு படியாகச் சுண்டக் காய்ச்சி அந்த கஷாயத்தை வடிகட்டி வைத்துக் கொண்டு அருகன் வேர் பலம் 2½, மிளகு பலம் 1, சீரகம் பலம் 1, அதிமதுரம் பலம் 1, கோரைக் கிழங்கு பலம் 1, சண்பகப் பூ பலம் 1 இவைகளை ஷை கஷாயத்தால் மெழுகுபட அரைத்து பிறகு அந்த கஷாயத்தி

லேயே கரைத்து விட்டு, கழுவி ஆட்டிய எள் எண்ணெய் படி 1 அதில் விட்டு ஒரு நாள் சூரிய புடமாக வெய்யலில் வைத்திருந்து, மறுநாள் சிறு தீயாக எரித்து, அடியில் தங்கும் கடுகானது மெழுகு பதம் கண்டவுடன் இரக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு வாரத்துக்கொரு முறை வேண்டிய அளவுக்குத் தைலத்தை எடுத்து சற்று சுடச் செய்து பாதாதி கேசம் பரியந்தம் தேய்த்துக் கொண்டு சீக்காயுடன் ஆறிய இளம் வெந்நீரில் காலை 8 மணிக்குள் ஸ்னானம் செய்து, புளியும் மோரும் நீக்கிய ஆகாரம் சாப்பிட்டு வர, மூளை கொதிப்பு, அயர்வு,உணர்ச்சி மாறல், உன்மத்தம், ரத்தக் கொதிப்பு, தேக காங்கை, உள் வேக்காளம், சரீர நமச்சல், சரீர வரவரப்பு முதலியவைகளைப் போக்கி, சுகத்தைக் கொடுக்கும்.

---

# ஆடா தோடை

"வழிநடைச் சித்தன்"

ஆடா தோடை, வாசை, வாசிகா என்னும் பல பெயரால் வழங்கப்படுகிறது. இச் செடி இந்தியா முழுவதிலும் ஏராளமாகப் பயிராகின்றது. இதன் இலை அதிகமாக மருத்துவத்தில் உபயோகப் படுகிறது.

ஆடாதோடை கைப்புச் சுவையுள்ளது. கோழை அகற்றும் செய்கையுள்ளது. எனினும் சில சமயங்களில் இசிவகற்றியாக செயலாற்றுகிறது. ஆகையால் இதனை சுவாச காசம் (இரைப்பு நோய்), சளி நோய், இருமல, கப நோய்களில் சளியை வெளிப் படுத்து நுரை ஈரலுக்கு வன்மையைக் கொடுக்கிறது. கபத்தினால் பிறந்த சுரங்களைத் தணிக்கிறது.

**இதனால் முடியும் மருந்துகள் :—**

| | | |
|---|---|---|
| 1. | ஆடா தோடை சுரசம் அல்லது சாறு | 1 to 5 ml |
| 2. | ஆடா தோடை குடி நீர் | 30 to 60 ml |
| 3. | ஆடா தோடை சூர்ணம் | ½ to 1 gm |
| 4. | ஆடா தோடை மணப்பாகு | 1 to 5 ml |
| 5. | ஆடா தோடை சுரச மெழுகு | 60 to 300 mgm |
| 6. | ஆடா தோடை சுருட்டு | |

**1. ஆடா தோடை சுரசம் :**

10 முதல் 20 துளிவரை தேனுடன் கலந்து கொடுக்க இசிவு நீங்கி இருமலும் குறையும்.

**2. ஆடா தோடை மணப்பாகு :**

| | |
|---|---|
| ஆடா தோடா இலை | 20 பலம் |
| தண்ணீர் | 12 பவுண்டு |
| நாட்டுச் சர்க்கரை | 20 பலம் |

இலையை தண்ணீரில் இட்டுக் கொதிக்க வைத்து நாலில் ஒரு பங்காக சுண்டினதும் வடிகட்டி சர்க்கரை சேர்த்து மணப்பாகாகச் செய்துக் கொள்ளவும்.

இருமல், கயம், இசுவு, சுவாச காசம் ஆகியவைகளுக்கு கொடுக்கலாம்.

**3. ஆடாதோடை சூர்ணம் :**

| | | | |
|---|---|---|---|
| ஆடா தோடை வேர் | 5 gm | சீந்திற் கொடி | 5 gm |
| கண்டங்கத்திரி வேர் | 5 gm | கடுக்காய் | 5 gm |
| திப்பிலி | 5 gm | | |

ஆக சம எடை எடுத்து சுத்தம் செய்து பொடியாகச் செய்து கொண்டு ½ முதல் 1 gm வரையில், தேனில் கொடுக்க இசுவு சுவாச காசத்தில் நீங்கும்.

**4. ஆடாதோடை சுரச மெழுகு :**

ஆடா தோடை சுரசத்தை மெழுகு பதமாகக் காய்ச்சி தேனிலோ சர்க்கரையிலோ கலந்து கொடுக்க சுவாசம் நீங்கி இருமல் தணியும்.

**5. ஆடா தோடை சுருட்டு :—**

ஆடா தோடை இலையை யுலர்த்தி சுருட்டி சுருட்டாக புகை பிடிக்க சுவாச காசம் தீரும்.

**6. ஆடா தோடை குடி நீர் :—**

மூன்று ஆடா தோடை இலைகள் எடித்து, சிறு துண்டுகளாக நறுக்கி, தேனில் வறுத்து 500 M.L. நீர் விட்டுக் காய்ச்சவும். அதில் அதிமதுரம், தாளிசபத்திரி, திப்பிலி வகைக்கு 1½gm. காய்ந்து கொண்டிருக்கிற நீரில் இட்டு 16ல் ஒன்றாக வற்றவைத்து, குடிநீராகச் செய்து கொள்ளவும்.

**தீரும் நோய்கள் :—**இருமல், காசம், சுரம்.

**7. ஆடாதோடை குடிநீர் (வேறு) :—**

ஆடா தோடைவேர், கண்டங்கத்திரிவேர், சீந்திற்கொடி, சம இடை சேர்த்துக் குடிநீராக்கிக்கொண்டு தினம் இரண்டுவேளை, வேளைக்கு 30 M. L. தேன் கலந்து கொடுக்க, கோழைக்கட்டு, இருமல். கபசுரம் தணியும்,

# நேசர் துப்பாக்கி மெழுகு

('சித்தமணி' பி. எல். பர்னாண்டஸ், சமயபுரம், திருச்சி)

வீரம்-பூரம்-லிங்கம், ரச செந்தூரம் இவைகளை, வகைக்கு பலம் அரைத்து பிறகு வெடியுப்பு நவச்சாரம் இவைகள் வகைக்கு பலம் சேர்த்து, அடுப்பில் வைத்து சூடான கடாய்ச் சட்டியில் வறுத்து எடுத்த பெருங்காயம் ½ பலம் சேர்ந்து அரைத்துக் கொண்டு நாட்டுச் சூடம் கட்டியாக உள்ளது ½ பலம், உயர்ந்த ரக சாம்பிராணி ½ பலம் தனியாக அரைத்துத் தூள் செய்து கொண்டு சேர்த்து அரைத்துக்கொண்டு மாட்டுக்கொம்பு டப்பியில் காற்றுப் புகாமல் வைத்துக் கொள்ளவும். பக்க வாதம்-மேக ரோகம், வீட்டு விலக்கு சரியாக ஆகாதபோதும் பனை வெல்லத்தில் குன்றிப் பிரமாணம் காலை மாலை 5 நாள் கொடுக்க வேண்டியது: மருந்து சாப்பிடும்போது கஞ்சி மட்டும்தான் ஆகாரம். வேறு எதுவும் கூடாது. இச்சாபத்தியம்.

---

# துளசியின் பெருமை

(சித்த வைத்தியர் கி. ரமணன்)

துளசி கபரோகங்களுக்குச் சிறந்தது. இச் செடியை விஷ்ணு என்றும் கூறுகின்றனர். இச் செடியின் வேரிலே சகல தீர்த்தங்களும், மத்திய பாகத்தில் சர்வதேவதைகளும், மேற்பாகமாகிய கிளை, இலைப்பாகத்தில் சகல வேதத் தத்துவங்களும் நிறைந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

துளசியில் சுண்ணாம்புச் சத்து, காரச்சத்து, இரும்புச்சத்து முதலியவைகள் இருக்கின்றன. இது கபம், சேரமை, சளி என்னும் இவைகளை முறித்து நம் உடலை சமனப்படுத்தும் சக்தி வாய்ந்த மூலிகையாகும்.

குழந்தைகளுக்கு சளி ஜுரம் கண்டால் இந்த துளசியின் உதவி தேவைபடுகிறது. உதாரணமாக கம்மார் வெற்றிலை (அல்லது) பச்சை வெற்றிலை 2-ம், துளசி கொஞ்சமும், முசுமுசுக்கை இலை இரண்டும் பொடுதலைத் தழை கொஞ்சமும், வெள்ளைப் பூண்டில் இரண்டு பற்களும் எடுத்து கசக்கி சாறாக்கவும். பின் சுத்தமான கரண்டியில் சாறை விட்டு இலேசாகக் காய்ச்சவும். பின் ஒரு கோரோஜனை மாத்திரை (அல்லது) தஞ்சாவூர் கருப்பு மாத்திரை ஒன்றை அந்த சாற்றில் மத்தித்துக் கொடுக்க ஒருமுறை மலசுத்தியாகி சளி கரைந்து குழந்தை சுகம் அடையும்.

குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்து விடும் தினத்தில் மேற் கண்ட வெற்று சாற்றினை ஊற்றி வந்தாலும் போதும். துளசியை தினமும் காலையில் கொஞ்சம் சாப்பிட்டு வருவது நல்லது. துளசி சாப்பிடுகிறவர்களுக்கு கயம் என்னும் வியாதி வராது. இதன் சக்தி உடலில் அதிகம் சேர்ந்தால் இருதயமும், நுரையீரலும் நல்ல முறையில் இருக்கும். சளி பிடிக்காது. துணிவும் நுண்ணறிவும் ஏற்படும்.

# ஆங்கில இலக்கியத்தில் திருக்குறட் கருத்துக்கள்

(பேராசிரியர் ஊ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ்., தமிழ்ப்பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்)

(முன் தொடர்ச்சி)

'என் அகவிருள் நீக்கி, உள்ளொளி ஏற்றி என்னை உயர்த்து. இந்நெறியில் நான் உயர்ந்து, உன் அருள் பெற்று, நிலைத்த பேரின்ப வாழ்வு வாழ்ந்து, இறை நெறியை மாந்தர்க்கு உணர்த்துவேன்' என்ற கருத்தை மில்டன் மொழிகிறார். வள்ளுவர் மில்டன் ஆகியோருடைய கடவுட் கொள்கை ஒன்றே.

## திருவள்ளுவர்—மெக்காலே MACAULAY

### எல்லாம் எல்லார்க்கும்

உள்ள பொருளைப் பகுத்துண்டு வாழ்கிற வாழ்வே தலையாய அறவாழ்வு என்று திருக்குறள் பாடுகின்றது.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'

பண்டைக்கால ரோமர்கள் வள்ளுவர் அறநெறிக்கேற்ப பொது நல வாழ்வு வாழ்ந்தார்கள் என்று மெக்காலே மொழிகின்றார்.

**Then none was for a party;**
**Then all were for the State :**

**Then the Great men helped the poor;**
**And the poor man loved the Great;**

**Then lands were fairly portioned;**
**Then spoils were fairly sold;**

**The Romans were like brothers**
**In the brave days of old'**

**—Lays of Ancient Rome: Heradotus'**

(தொடரும்)

# குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள். எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல். மைசூர் மாநிலம்.)

(முன் தொடர்ச்சி)

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.''

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாததைப் போன்று வள்ளுவனார் கையாளுகின்ற சொல் அளவில் குறுகியதாக இருந்தாலும் பொருளில் மிகவும் பரந்து பட்டது என்பது தேற்றம்.

**பொருள் ஆழமும் ஒலி நயமும் :**

திருவள்ளுவனார் எதுகை மோனைக்கும் அடுக்குமொழிக்கும் கவலைப்பட்டார் அல்லர். பொருளாழமும் பொருள் அமைதியுமே அவருடைய குறிக்கோளாக அமைகின்றது. எடுத்துக்காட்டாக

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.''

என்ற குறட்பாவை சிறிது ஆராய்வோம், 'எச்சம' என்ற சொல்லுக்குப் பதிலாக 'மக்கள்'' என்ற பதத்தை வழங்கி இருப்பாரேயானால் எதுகை முற்றிலும் பொருந்தி யிருக்கும். ஆனால் ஆசிரியர் எதுகை மோனையைவிட பொருளாழத்தையே சிறப்பாகக் கொண்டார் ஆதலால் 'மக்கள்' என்ற சொல்லை வழங்காது 'எச்சம்' என்ற சொல்லையே வழங்கினார். அவ்வாறிருந்துங்கூட பல குறட்பாக்களில் பொருளாதாரத்துடன் ஒலி நயமும் சேர்ந்திருப்பதைப் பார்க்கின்றோம்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.'' (அடக்கமுடைமை)

ஒருவன் காக்கவேண்டியவைகள் பல இருக்கின்றன. பிறர் மனைவியை காம நோக்குடன் பார்க்க மனம் விழையும்பொழுது கண்ணைக் காக்கவேண்டும். அயலாருடைய மறை பொருளைக் கேட்பதினின்றும் செவியைக் காக்கவேண்டும். போகாத இடந்தனிலே போக நினைக்குங்கால இரு கால்களையும் காக்கவேண்டும். ஏதிலார் பொருளை நடுநிலையின்றி வெஃக நினைக்கும்பொழுது இரு கரங்களையும் காக்கவேண்டும். மனம்போன போக்கெல்லாம் போகாது தீய எண்ணங்களினின்றும் உள்ளத்தை காக்கவேண்டும். இவை எல்லாவற்றையும் காக்காவிட்டாலும் நாக்கை ஒன்றையாவது உறுதியாகக் காக்கவேண்டும். அவ்வாறு நாக்கைக் காக்கத் தவறினால் சோகத்தைக் காக்க நேரிடும். ஆக்கமும் கேடும் நாக்கினால்

உண்டாவதால நாவைப் பத்திரமாகப் பாதுகாத்தல் வேண்டும். கனகவிசயர் என்ற வடநாட்டு ஆரிய மன்னர்கள் ஆக்கத்திற்கும் கேட்டிற்கும் காரணமான நாக்கைக் காக்காது தமிழகத்தை இழித்துப் பேசியதனல் அவர்கள் சேரன் செங்குட்டுவனுல் தலையில் கல் சுமக்க வைக்கப்பட்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க தொன்றுகும். இக்குறட்பாவில் பொருளாழமும் ஒலி நயமும் ஒன்றி கிடக்கின்றதை நாம் உணர்கின்றேம்.

"எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்."

இக்குறட்பாவில் ஒலிநயம் மிகவும் நுட்பமாக அமைந்திருக்கின்றது. இரு உதடுகளும் ஒன்றையொன்று தொடாமல் (நீரோட்டகம்) இக் குறளை உச்சரிக்க முடிகின்றது. என்னே குறட்பாவின் ஒலி நுட்பம்.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை."

என்ற முற்றுமோனையுள்ள குறளை மனத்தில் வைத்துக்கொண்டு தான்

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்."

என்ற வெண்பாவை சீத்தலைச்சாத்தனுர் பாடினுர் போலும்.

**காலையும் மாலையும் :**

"வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார் விண்தோய்
**காலையும் மாலை** தானும் இல்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனுள் உம்பி புல்லினுல் தொடுத்த தூய
சாலையின் இருந்தாள் ஐய தவஞ்செய்த தவமாந் தையல்."

இது இலங்கை மாநகரில் அமைந்துள்ள அசோகவனத்தின் வளப்பத்தை விளக்குகின்ற கம்பர் பாடல். காலை மாலை ஆகிய இரு வேளைகளின் இயல்பையும் காதற் கண்கொண்டு சிறிது ஆராய்வோம். மிக நுண்ணிய காமமாகிய மலர் காலையில் அரும்புகின்றது. பகல் முழுவதும் வளர்ந்துகொண்டே அரும்பின் அடுத்த பருவமாகிய போதை அடைகின்றது. போதுப் பருவத்தில் இருக்கின்ற காம மலர் மேலும் வளர்ந்து முழு வளர்ச்சியையும் மாலையில் அடை

கின்றது. இந் நிலைதான் காம மலர் நன்று மலர்ந்து வாயவிழ்ந்திருக்கின்ற மலர் பருவமாகும்.

" காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்."

பிரிவாற்றுமையால் வருந்துகின்ற காதலி காம நோயால் காலையிலும் மாலையிலும் அதிகத் துன்பப்பட்டாளல்லள். அவளுடைய துயரம் முழுவதும் மாலைக் காலத்தில் உச்ச நிலையை அடைந்து விடுகிறது. மாலை இவ்வாறு துன்புறுத்துகின்றது என்பதை இப்பொழுதுதான் தலைவி உணர்கின்றுள். தலைவனுடன் இன்புற்று உடன் உறைந்த காலை இத்தகைய துயரை மாலைக்காலம் அளிக்கும் என்று கனவிலும் கருதினுளல்லள். எனவேதான் மாலைப் பொழுதை முன்னிலையாக வைத்து " மாலையே, நீ உண்மையான மாலைக் காலம் அல்லை; பிரிவாற்றுமையினுல் அல்லலுறுகின்ற என் போன்ற பெண்டிர் உயிரை வதைக்கின்ற வேலையாக அமைந்திருக்கின்றுய்." என்று கூறுகிறுள். காலைப் பொழுதோ தலைவிக்கு எவ்விதத் துன்பமுந் தருவதில்லை. ஆனுல் மாலைப் பொழுது அவளுடைய உயிரை உண்ணும் கொடிய கொலைக் கருவியாக அமைந்திருக்கின்றது. எனவேதான் " காலைப் பொழுது என்னைத் துன்புறுத்தாமல் இருப்பதற்கு நான் அதற்கு என்ன நன்மை செய்தேன்?" மாலைப் பொழுது என்னை வருத்துகின்றதே அதற்கு நான் என்ன தீங்கு செய்தேன்?" என்று உள்ளம் இரங்கி வினவுகின்றுள்.

" மாலையோ அல்லை மணந்தார் உயருண்ணும்
வேலைநீ வாழி பொழுது."

" மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்."

" காலைக்குச் செய்தநன்று என்கொல் வென்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை." (பொழுதுகண்டு இரங்கல்.

(தொடரும்)

---

உலகப் பொது மறையாகிய திருக்குறளைப் படித்து
குறள் நெறி வழியில் வாழுங்கள்,

# "இரத்தக் கொதிப்பு"

(தில்லை விஜயன்)

இரத்தக் கொதிப்பு வியாதி நம் நாட்டில் பலருக்கு ஏற்படுவதைக் காண்கிறோம், இது எதனால், யாருக்கு உண்டாகிறது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது வியாதியுற்றிருக்கும்போது அந்த உடல் நிலை எவ்வாறிருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டால் இந்த வியாதியை எளிதில் நிவர்த்திக்க முடியும், பொதுவாக எந்த வியாதியையும் ஆராய்ந்து வியாதி ஏற்படுவதற்கான காரணத்தையும் வியாதியுற்றபோது அவ்வுடல் நிலை எவ்வாறிருக்கிறது என்றும், வயதின் அளவு அறிந்து அதற்கேற்ற மருந்தை அளவுடன் கொடுப்பதே சித்த நூற்களின் பண்பு.

இரத்தக் கொதிப்பு வியாதி என்பது வாத சரீரங்களுக்கும் வாத சிதள சரீரங்களுக்கும், மட்டும்தான் உண்டாகும். பித்த சரீரங்களுக்கு இவ்வியாதி வருவதில்லை.

மேற் குறிப்பிட்ட வாத சரீரத்திற்கும், வாத சிதள சரீரத்திற்கும் பித்தம் அதிகரிக்கும்போது குறிப்பாக, கோடைகாலத்தில் இவர்களுக்கு இவ் வியாதி தொல்லை கொடுக்கும், பித்தம் அதிகரிக்கும்போது அந்தப் பித்தத்தின் சுய தன்மையான (அக்கினி) உஷ்ணத்தினால் இரத்தம் சுண்டி மேலும் கொதிப்பேறுகிறது. அப்படி கொதிப்படையும்போது இரத்தம் பெருத்த அளவில் அதிகமாகத் தோன்றி சரீரத்திலுள்ள எல்லா இரத்த நாளங்களிலும் சூடேறி புடைத்துக் கொள்ளுகிறது. அதன் காரணமாக உடலில் பாயும் இரத்தம் சூட்டுடன் பரவுவதால் உடலில் விறுவிறுப்பும் மயக்கமும் வாந்தியும், உடற் பட்டதமும் ஏற்படுகிறது.

உதாரணமாக ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அடுப்பில் வைத்து கொதிக்க வைத்தால் அத் தண்ணீர் கொதிக்கும்போது அதிக அளவில் இருப்பதைப் பார்க்கிறோம். அதை அப்படியே எடுத்து ஆறவிட்டால் நாம் வைத்த அளவு தண்ணீரை விட குறைந்திருப்பதைக் காண்கிறோம். அது போல் இரத்தம் கொதிப்படையும்போது அதன் அளவு அதிகமாகத்தான் காணும்.

தண்ணீர் கொதிக்கும்போது அதிகமாக இருக்கிறதென்று எண்ணி தண்ணீரை குறைப்பதல்ல, எரிவதைக் குறைக்க வேண்டும் அதுபோல் இரத்தம் கொதிப்பினால் அதிகமாகத் தோன்றுவதால் இரத்தத்தை குறைப்பதல்ல பண்பு. கொதிப்பிற்கு காரணமாக இருந்த சூட்டை, சூட்டின் ஆதிகாரணமான பித்தத்தை முறையாகக் குறைப்பதே மருத்துவப் பண்பு ஆகையால் இதைக் குறைப்பதற்கு எனது அனுபவமான முறைகளைக் கீழே எழுதுகிறேன்.

இதற்கு பவளபற்பம் ஒரு குன்றியளவு அன்னபேதி சிந்தூரம் ஒரு குன்றியளவு சிலாசத்து பற்பம் ஒரு குன்றியளவு சேர்த்து நெய்யில் குழைத்து ஆகாரத்திற்கு முன் கொடுக்கவும். இப்படி

மூன்று வேளை இத்துடன் திராக்ஷாரிஷ்டம் அரை அவுன்ஸ் தசமூலாரிஷ்டம் அரை அவுன்ஸ் சேர்த்து கொதித்தாரிய தண்ணீர் ஒன்றரை அவுன்ஸ் சேர்த்து நன்ருகக் குலுக்கி மூன்று அவுன்சை வேளைக்கு ஒருஅவுன்ஸ் வீதம் மூன்றுவேளைக்கும் முன் மருந்துடன் ஆகாரத்திற்கு முன் கொடுக்க வேண்டியது.

அத்துடன் புலிப்பாணி 500 ன் முறையான ஜீரகச் சூரணம் மூவிரல் கொண்டது ஒரு வேளைக்கு ஆகாரத்திற்கு அரை மணி நேரத்திற்கு பின் கொடுத்து வெந்நீர் உட்கொள்ளச் சொல்லவும். இப்படி இதுவும் மூன்றுவேளை கொடுக்கலாம். இப்படிக் கொடுத்து வந்தால் இரத்தக் கொதிப்பு வியாதி அதி சீக்கிரம் குணமாகும். ஆச்சரியமான பலனைக் காணலாம்.

காப்பி, டீ, கொத்தவரங்காய், பீன்ஸ் முதலிய பித்த சம்மந்தமான பதார்த்தங்கள் மட்டும் மருந்துண்ணும்போது நீக்கிவிடவும். மற்ற எல்லா பதார்த்தங்களும் சாப்பிடலாம். சத்துள்ள உணவு வகைகளான மாமிசம் முட்டை மீன் முதலியவைகள் நிறைய சாப்பிடலாம். கட்டுப்பாடு கிடையாது. ஆனால் குளிர்ச்சியான ஆகாரங்கள் நிறைய உட்கொண்டால் விரைவில் குணமாகும், இது எனது அனுபவம், உண்மை, இப்படி இரத்தக் கொதிப்புள்ள வியாதியஸ்தர்களுக்கு ஆங்கில மருத்துவர்களிடம் சிகிச்சைபெற்று தீராது என்று கைவிடப்பட்ட கேஸ்களை குணமாக்கியிருக்கிறேன்.

குறிப்பு:—ஒரு வியாதிக்கு ஒரு மருந்து இருந்தது என்று இருந்தாலும் வியாதியஸ்தரின் உடற் தன்மையும் வயதும், வியாதியின் நிலையும், நாடியை நன்ருகப் பார்த்து மருந்துகளின் சத்துருமித்துவறிந்து கலந்து கொடுப்பதில் நல்ல பலனைக் கண்டிருக்கிறோம்; எல்லா வியாதிகளுக்கும் மருந்துகளைக் கலந்து கொடுக்க வேண்டிய அவசிய மேற்படின் அவ்வாறுணர்ந்து செய்வதே சாலச் சிறந்தது என்பது எனது கருத்து மேலும் இது அனுபவத்தால் மட்டுமே செய்ய வேண்டும் அநுபவமில்லா ஏதாவது தவருகக் கலந்து கொடுத்து விட்டால் வியாதி அதிகப்பட்டோ அல்ல வேறு ஒரு புதிய வியாதியும் அத்துடன் சேர்ந்து கொண்டோ ஆபத்தை விளைவிக்கும் மிக எச்சரிக்கையுடனும் நிதானமுடனும் மருத்துவ அனுபவத்தை உணர்ந்து செய்ய வேண்டும். தவிர இக்காலத்தில் சிலருக்கு மட்டுமே நாடி பார்க்கத் தெரிகிறது. பலருக்கு நாடி பார்க்கத் தெரியவில்லை. இது நமது சித்த மருத்துவத்திற்கு ஒரு பெருங்குறை ஆகையால் நமது சித்த மருத்துவ அன்பர்கள் அனைவரும் நாடியின் பாடல்களை மனப் பாடம் செய்து கொண்டு நாடி பார்க்கத் தெரிந்தவர்களிடம் சென்று அனுபவபூர்வமாகவும் பழகி உணர்ந்து கொள்வது மிக்க நன்மை, அதைவிடுத்து தெரிந்தவர் போல் நடப்பதில் பயனில்லை மேலும் அவர்களுக்கு அது பிற்காலத்தில் கெட்ட பெயரையும் உண்டாக்கும் ஆகையால் சித்த மருத்துவ அன்பர்கள் நாடியை புரிந்து கொண்டும் நல்ல அனுபவம் பெற வேண்டுமென்பதே எனது ஆசை.

திருச்சி—சமயபுரம்

# நேசர் வைத்தியசாலையின்

## பரம்பரை அனுபவ மருந்துகள்

துப்பாக்கி மெழுகு :

தங்கலிங்க மெழுகு :

தேவாமிர்தம் :

பிண்டத்தைலம் :

சஞ்சீவித் தைலம் :

உபயோகியுங்கள்.

" சித்தமணி" P. L. பெர்ணண்ட்ஸ்

சமயபுரம் P.O.

திருச்சிராப்பள்ளி.

# கைமுறை அநுபவ வைத்தியம்

(சித்தவைத்தியர் பென்சாமின், லாலுகார்புரம், திருநெல்வேலி)

## குழந்தை மருத்துவம்

**1. பிரவிதோடம் முதலியவைகளுக்கு:** மகாளி என்னும் பேயனும் அதின் குணமும்; எந்நேரமும் வயிறு கழியும், மேல் வெதும்பும்,

**சிகிட்சை:** வெற்றிலையை அரைத்து துவாலையிட்டு சாயந்திரம் இளம் வெந்நீரில் குளிப்பாட்டவும், இப்படி 3 நாள் செய்து தோஷ குணத்திற்கு உள்ள வேர் கட்டவும்.

**2. வருணன் என்னும் பேயன் குணம்:** பாலெதிரெடுக்கும், முறுக்கி, இருமல் தோன்றும், மேல் வெதும்பும், மூடின கண் திற வாது, பல பல குணங்கள் செய்யும்.

**சிகிட்சை:** எருக்கம் பூவை குருவே நமா என்று மந்திரித்து பூவைத் தலையில் வைத்து முடக்கத்தான் இலையை இடித்துப் பிழிந்து சிரசு முதல் பாதம் வரை துவாலையிட்டு துவர்த்தவும். இவ்வாறு ஏழுதரம் செய்து சாயந்திரம் குளிர்ந்த நீர் விட்டு குளிப்பாட்டவும் இவ்வாறு 3 நாள் செய்யவும். தோஷத்திற்கு வேண்டிய குளிச்சங் கட்டவும்.

**3. நீலி என்னும் பேயன் குணம்:** முலையுண்ணாது, விக்கலெடுக்கும், வெதும்பும், வயிறு கழியும், அழாது, சில்லரை செய்யும், திடுக்கிடும்.

**சிகிட்சை:** விடத்தலை வேரைப் பிடுங்கி குளிசமாடி கட்டத் தீரும்.

**4. விருகனென்னும் பேயன் குணம்:** திடுக்கிடும், பாலெதிரெடுக்கும், முலையுண்ணாது, உச்சிக்குளியும், கண் வட்டமிட்டிருக்கும். வயிறு கழியும், மேல் வெதும்பும்.

**சிகிட்சை:** எருமைக் கொம்பு சிறுயெடுத்து கறண்டியில் போட்டு புகை காட்டவும். முடக்கத்தான் வேர் குளிசங் கட்டவும்.

**5. உதியன் என்னும் பேயன் குணம்:** மேல் வெதும்பும். புறங்கையால் முகந்துடைக்கும், அழும். உடம்பு தளர்ந்து நடுங்கும். வயிறு கழியும், எதிராடி முலையுண்ணாது.

**சிகிட்சை:** சிறுபுள்ளடி வேர் குளிசமாடிக் கட்டவும்.

**6. மாகாளி என்னும் பேயன் குணம்:** விக்கலெடுக்கும் சீறி அழும். முலை யுண்ணாது. வயிறு கழியும். கீழ் நோக்கி விளிக்கும். புறங்கையால் முகந்துடைக்கும் சடலம் வெதும்பும்.

**சிகிட்சை:** இடுகாட்டில் எது முளைத்திருக்குமோ அதை பூண்டை பிடுங்கி குளிசமாடிக் கட்டவும்.

**7. கேத்தரி என்னும் பேயன் குணம்:** மேல் வெதும்பும், வயிறு கழியும். புறங்கையால் முகந்துடைக்கும்.

சிகிட்சை: மணத்தக்காளி வேர் குளிசமாடி கட்டவும்.

**8. முனிவனென்னும் பேயன் குணம்:** வயிறு கழியும். உடம்பு இளைக்கும். முலை யுண்ணாது. உருமாற்றுவிக்கும்.

சிகிட்சை: மாந்த இலைச்சார்பிழிந்து 3 நாள் துவாலைப் போட்டு 3 நாள் குருவே நமா என்று மந்திரித்து தலை வழியாய் தண்ணீர் விடவும்.

**9. பத்திரக்காளி என்னும் பேயன் குணம்:** தலையுருட்டிக் கொள்ளும். வாய் நீர் வடியும். வயிறு கழியும். பல பல விதங்கள் செய்யும்.

சிகிட்சை: கோழியாவரை இலையை 3 நாள் துவாலையிட்டு 3 நாள் குருவே நமா என்று மந்திரித்து வென்னீர் விடவும்.

**10. விகாரி என்னும் பேயன் குணம்:** உடல் வெதும்பும். தலை நோகும். சீறி அழும். தாகமுண்டாகும். நடுங்கும். வயிறு குழியும். குடித்தபால் வாயாலெடுக்கும். பல பல விதஞ்செய்யும்.

சிகிட்சை: ஆட்டு மயிர் புகை காட்டவும். இப்படி 3 நாள் காட்டவும்.

**11. திரி என்னும் பேய்ன் குணம்:** கண் சுழட்டும். மலஞ்சலஞ் செய்யும்.

சிகிட்சை: குருமே நமா என்று 3 நாளைக்குத் தண்ணீர் விடவும்.

**12. ஆரம்ப பேயன் குணம்:** குரு வியாதி புறப்படும்.

சிகிட்சை: கோரோசனை உரைத்துக் கொடுக்கவும். குரு பாதம் வேணும்.

**13. விலிக்கதோஷம், குளிதோஷம் பிள்ளையைத் தொட்ட தோஷத்தின் குணம்:** தாயார் முலையில் வாய் வைத்து சற்றே உண்ணுந் திகைத்திருக்கும். குழந்தை மேல் வாடியிருக்கும். சீறும், வெதும்பும். வயிறு ஒழுகும். சாயாது உறங்கும். எழுந்திருக்கும்.

**14. பிள்ளைக்கு மலசலமடைத்தல் மருந்து:** கொழியலரிசி மிளகு 3 எடுத்துக் கொதிக்க வைத்து வயிற்றில் தப்பளம் போடவும். இறங்கும்.

**15. விலக்கமான்வள் தொட்ட தோஷம்:** மீதனை தனக்கு மேனி விரிடி வயிற்றினில் பரளும். தொங்கா தலையினிற் குளிர்முண்டாம். சத்தியுங் கழியுங் நீராய் நுதலுமுகஞ் சிதையன்றி நோக்கிய விளிழுந் தளர்ந்து குறளை வாய்க் கருகித் தோன்றும். குளித்தவள் எடுத்தக் காலோ.

(தொடரும்)

# சௌந்தரிய லகரி

## ஆனந்த லகரி

(சித்த வைத்தியர், எச். பி. முத்து கிருஷ்ணன், தெற்குப்பை)

(முன் இதழ் தொடர்ச்சி)

'சிவம்' எனும் பொருளும், ஆதி சத்தியொடு
சேரின், எத்தொழிலும் வல்லதாம்;
இவன் பிரிந்திடின், இயங்குதற்கு அது,
அரிது, என்று, மறை இரைக்குமால்
நவ பெரும் புவனம், எவ்வகைத் தொழில்
நடத்தி யாவரும் வழுத்து தான்
அவனியின்கண், ஒருதவம் இலார், பணியல்
அவதோ? பரவல் ஆவதோ?

(உரை) சிவம் என்று சொல்லப்படும் மெய்ப் பொருளும்; ஆதி சக்தியோடு சேரில், எத்தொழிலும் நடத்தவல்லது ஆகும். இந்த சக்தியானது பிரிந்துவிடுமேயானால், "சிவம்" என்ற மெய் பொருளாம் இறைவனும் இயங்குதற்கு இயலாது. அசைதற்கும் அரிது என்று வேதங்கள் முழங்குகின்றன. ஆனதால் ஒன்பது வியூகமாக உள்ள பெரும் புவனத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் முதலாய தொழில்களை நடத்தும், பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் முதலான யாவரும் துதிக்கும், பராசக்தியாம் அன்னையின் பாதத் தாமரைகளை, இவ்வுலகில், எத்தனை எத்தனையோ தவங்கள் செய்தவர்களால் அன்றி, ஒரு தவமும் செய்யாதவர்கள் வணங்கக் கூடுமோ? வாக்கினால் புகழ்தல் செய்யக் கூடுமோ? (முடியாது என்பதே தாத்பர்யம்).

இதனால், இறைவியின் அருள் இல்லையெனில், உயிர்களுக்கும் ஓர் செயல் இல்லை என்பது பெறப்படுகின்றது.

நவ வியூகம்; கால வியூகம்; குல வியூகம்; நாம வியூகம்; ஞான வியூகம்; சுத்த வியூகம்; நாத வியூகம்; விந்து வியூகம்; கலா வியூகம்; சிவ வியூகம்; முதலியனவாம். இவற்றுள், நிமிடம் முதல் கற்பம் வரையில், கால வியூகம்; ஆதலால், சூரிய சந்திராதிகளும் அடங்கியுள்ளன. நவ வியூகத்தில் உலகமெல்லாம் அடங்கும் வியூகம் கூட்டம்.

பராசக்தியின் "ஸ்ரீ சக்ரம்" ஒன்பது முக்கோணங்களால் ஆகியது. கீழ் நோக்கிய முக்கோணங்கள் ஐந்தும், சக்தி சக்ரங்களாம். மேல் நோக்கிய முக்கோணங்கள் நான்கும், சிவ சக்ரங்களாதும். இந்த ஒன்பது சக்கரங்களும் அண்டமாகிய உலகிற்கும், பிண்டமாகிய உடலுக்கும், மூலகாரணங்களான தத்துவங்களைக் குறிப்பவையாதலால், அவை மூலப் பிரகிருதிகள் என்றும்

யோனிகள் என்றும் கூறப்படுகின்றன. உடலிலுள்ள மூலப் பொருள்களில், மஜ்ஜை, சுக்லம், பிராணன், ஜீவன் என்ற நான்கும் சிவாம்சம் : தோல், இரத்தம், மாம்ஸம், மூளை, எலும்பு, என்று ஐந்தும் சக்தி அம்சம், அண்டத்திலுள்ள மூலகாரணங்களில், மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்றும் ஐந்தும் சக்தி தத்துவம்; மாயை சுத்தவித்தை, மகேசுவரன், சதாசிவன் என்ற நான்கும் சிவதத்துவமாம். இவைகளின் இணைப்பே, உலகம், உடல், உயிர் ஆம்.

பராசக்தியை வழிபட வேண்டுமென்றோ, "சௌந்தரிய லகரி" போன்ற துதிப்பாடல்களால், இறைவி துதிக்க வேண்டுமென்றோ ஆசைப்படுவதும், மூத்தவத்தின்பயனேயாகும் அன்றோ!

" தவமும், தவ முடையார்க்கு ஆகும்" என்பதும் திருவள்ளுவர் வாக்கு "

(இச் செய்யுளைக் கொண்டு இறைவியை துதிசெய்யின், சர்வ காரிய சித்தியும், ஏற்படும்).

### பாத தூளி மகிமை

*பாத தாமரையின், நுண்துகள், பரம*
*அணுவினில் பல இயற்றினல்*
*வேத நான் முகன் விதிக்க, வேறுபடு*
*விரிதலைப் புவனம் அடைய; மால்;*
*மூட அரர் வடிவு எடுத்து, அனந்த முது*
*கண பணடவி பரிப்ப; மேல்*
*நாதனுர், பொடிபடுத்து, நீறணியின்,*
*நாம் உரைத்தென்? அவள் பான்மையையே!!*

(உரை) ஸ்ரீதேவியுடைய திருவடித் தாமரைகளில் பொருந்திய நுண்ணிய துகளாகிய பரம அணுவைக் கொண்டு, வேதங்களை யுடைய நான்முகனுன பிரம்மன், பல்வேறுபட்ட விரிந்த இடத்தை யுடைய புவனம் அடங்கலும், படைக்கவும், அப்புவனங்கள் யாவையும், திருமால், பெரிய பாம்பின் வடிவு எடுத்து, அநேக பெரிய படக்கூட்டமாகிய அடவினல் தாங்கவும், அதற்குமேல் உருத்திரன் அவற்றை (அப் பராசக்தியின் பாதத்தின் கண் இலங்கும் துகளை) பொடி படுத்து விபூதியாக மெய்யில் பூசிக்கொள்வா ரென்றால், அவளது (அப் பராசக்தியானது) சரிதத்தை நாம் உரைப்பது, என்ன இருக்கிறது? நாம் உரைப்பதில் அன்னை பராசக்தியின் சரிதம் அடங்கக் கூடியது இல்லை.

இதனல் "பராசக்தி"யின் பாதத்தாமரைகளையே, கருதல் வேண்டும் என்பது பெற்றும்.

ஆலம் வித்தினுல் பெரிய ஆலமரம் உண்டாக்குவதுபோல் அணுக்களினுல், புவனங்களை, நான்முகன் உண்டாக்குவன்.

உலகங்கள், உணர்வு, உயிர்கள், வேறுபட்டாலும், இடம் வேறு பாட்டினுலும், "வேறுபடு புவனம்" என்று கூறப் பெறுகின்றது.

காக்கும் தொழில் உடையவர், திருமால், பெரிய பாம்பு வடிவு எடுத்து (ஆதிசேடன் வடிவுடன்), இவ்வுலகங்களை, தன் ஆயிரக் கணக்கான, தலைகளால் தாக்கி இரட்சிக்கின்ருர் என்ற பொருள் படக் கூறப் பெற்றுள்ளது.

இச் செய்யுளால், தேவியினுடைய பாத தூளியே முத் தொழிற்கும் காரணம் என்று கூறியது. (தொடரும்)


# ஓர் அறிவிப்பு ?

வைத்தியர்கள் - டாக்டர்கள் - கம்பவுண்டர்கள் - ஹோமியோபதி வைத்திய சாலைகள் - மருந்துக் கடைகள் - ஜெனரல் மெர்ச்சண்டு & மளிகை கடைகளுக்கும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மிகச் சிறந்த

## மூன்று வகையன பேதி மருந்துகள்!

மாதிரி சாம்பிள் இலவசம் !

1 ரத்னு சுகபேதி அல்வா (இனிப்புள்ளது)
2 S. V. R. சுகபேதி எண்ணை (காப்பியில் சாப்பிட)
3 S. V. R. சுகபேதி மாத்திரை (சக்கரையில் சாப்பிட)

விற்பனையாளர்களுக்கு மொத்தமாகவும் சில்லரை யாகவும் சப்ளை செய்யப்படும்.

—— தேவைக்கு எழுதவும் ——

தயாரிப்பாளர் : சித்த வைத்திய பண்டிட்

## S.V.R. கண்டர் சன்ஸ் R.I.M.P.

"இராஜ சித்த வைத்தியசாலை"

அரிசிப்பாளையம் :: சேலம்-9.

N. B:—மற்றும் எமது வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளின் கேட்லாக் இலவசம்.

# ஞிஜானந்த போதம்

(சித்த வைத்தியர் தில்லை ஆர். விஜயன் பி. ஓ. எல்.
சூளை, சென்னை-7)

(முன் இதழ் தொடர்ச்சி)

இதை அறிவின் மிக்கோர் அறிவின் முன்னிலையில் நுட்பமாய் யோசிக்க விந்தின் செயலும் அதன் சக்தியையும் பெருமையையும் அறிந்து அதில் தேறும் அனுபவ சித்தாந்த நிலையில் சதா சர்வ காலமும் ஆனந்தபரவசனாக விளங்குவர். அதாவது விந்தைக் கட்டி மணியாக்கி அதன் பெருமையாகிய சித்துகளோடு அழிவில்லாத போத நிலையில் நிற்பர். ஆயினும் மறை சம்மந்தமாக விருக்கும் மாயை வசத்தே சென்று வரவேண்டிய கர்மங்களிருந்தால் தன் நிலை தவறாது மாயை இருளில் மூழ்காது உலக பாமர மக்களும் அறியாவண்ணம் சென்று வருவர் மஹான்கள். இதை உள்ளுணர வேண்டில் கீதையின் பொருளுணர்ந்தோர் எளிதில் தெளிவு பெறுவர்.

ஓயா விருபக்கத்துள் வளர்பக்கத்து, ளேயா வெண்ணுளின்ப மேற்பனி மூன்றிரண்டாயாவ பரத்து, ளாதிநாளாறுமே. ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம் வேறன்பு வேண்டுமோர் பூவாரிற் பின்னந்தோ டேறு மிருபத்தொரு நாளிடைத் தோங்குமாறின் தோங்கு மக்காலஞ் செய்யவே, செய்யுமளவிற்றிழி நான் முகூர்த் தமே, யெய்யுங்கலை கால மிந்துபருதி காலையுமிடத் தோடினன் காமநூனெறி, செய்கவலை மிடந்தீர்ந்து விடுவிக்கவே, கலக்கு நாள் மூன்றுடன்னிடைக் காதலைத்தக வேண்டி லந்நாரியுதாரகக், கலத் தின் மலத்தைத் தண் சீதத்தைப் பித்தை விலக்குவன செய்து மேவலீணவிரே.

விழுந்தது லிங்கம் விரிந்ததுயோனி யொழிந்த முதலைந்து மீரைந்தோடேரிப் பொழிந்து புனபூதம் போற்றுங்கரண, மொழிந் தறுதலுச்சியுள்ளே யொளித்தே மாதரிடத்தே செலுத்தினு மவ் விந்து காதலினால் விடார் யோகங்கலந்தவர். மாதருயிராசைக் கைக் கொண்டே வாடுவர் காதலர் போன்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே. அக்கினி என்ற தீ. வகை ஐந்துண்டு. அவையாவன: மூலாக்கினி, பசி தீபாக்கினி, கோபாக்கினி, பெண்களின் மையலால் வரும் தாபாக்கினி; யோகத்தினால் பெற்ற சித்தியின் ஞானக்கினி, என்ற ஐவகையுண்டு. இவ்வகையில் ஆதியுமந்தமுமான மூலாக்கினியும், ஞானக்கினியும் பாமரர்களாக இருக்கும் நாமறியோம். நம் முன் னோர்களாகிய சித்தர்கள் அறிந்து பெற்றது. மற்ற மூன்று தீயாகிய, பசித்தீ, கோபத்தீ, தாபத்தீ, இம்மூன்று உற்பவங்க ளாகிய தீக்கலை அனைவரும் நம் சரீரத்தில் காண்கிறோம். இதை நம் முன்னோர்கள் கூறியதைக் காண்போம்.

உரமடி மேதினியுந்தியிலப்பாம் விரவியதன் மூலை மேவிய கீழங்கி கருமூலை மீமிசை கைக்கிழிக் காணும் விரவயங்கந்தரமேல் யொளியாமே.

சுத்தமுசத்த மன்முமனக்கருத் தொத்தறிகின்ற விடமு மறி கிலர், மெய்த்தறிகின்ற விடமறிவாளர்க்கு, வத்தனிடப் பிடமவ் விடந்தானே.

அங்குமதி கூட வாகுங் கதிரொளியுங் கெதிர்கூட வாகுமதி யொளி, யங்கி சிவத்தினிற் கூடவத்தாரகைத் தங்கியதுவே சகலமுமாமே.

பத்து மிரண்டு பகலோனுயர்கலை பக்திறுடைாறு முயர்கலை யான்மதி, யொத்த நல்லங்கிய தெட்டெட்டுயர்கலை யத்திற னின்றமையாய்ந்து கொள்வீரே.

என்று கூறியுள்ளார்கள். மேலாம்பதத்தை யளிக்கும் பூரண அக்கினியை நாம் கேவல விடயங்களில் சிலவிட்டு வாழ்நாட்களைக் கேவலப்படுத்துகிறோம். அவ்வகை செய்கினும் அதனுல் அனேக வியாதிகளை அனுபவிக்க நேரிடுகின்றது, இதை தவிர்க்க நம் முன் னோர்கள் விதித்ததை காண்போமானுல்,

"உண்ணும்போ துயிரெழுத்தா லுயிரைவாங்கி
உறங்குகின்ற போ தொல்லாமதுவே யாகும்
பெண்ணின் பாலிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணியுயிர் மேல் வாங் கென்று செப்பி யிருக்கின்றனர்

அதை நாம் உணர்ந்து அனுபவத்தில் கொண்டு வந்தால் நலம். விந்துவை அதிகமாய் சிலவழிப்பதில் பிணி, மூப்பு, சாக்காடு எளிதிலடையக்கூடும், ஆகாரத்தில் பிரிந்த அன்னரச மானது உதிரமாகி, 7-வது நாள் விந்துவாகிறது. இதை காலக்கிரம மில்லாமல் விரையம் செய்யாமல், மாதத்தில் இரண்டு தரம் பெண் பூர்வகாலத்தில் (அமுதாநிலையறிந்து) பயன்படுத்தும் தினம் யோகிப்பதில் தவறில்லை. அவ்விதம் தரிக்கும் சிசுவானது ஆயுள் விருத்தியும் தேகதிடமும் பிணியில்லாமலுமிருக்கும்.

உந்தியிலிருக்கும் உதான வாய்வால் காமம் கண்டத்தானத்தி லுள்ள குழியிடமிருந்து சமான வாய்வானது கமலபிரை பிரகா சிக்கும் ஸ்தானமடையுமாகில் கபாலசூலை, யிடி, அசதி வயி றிறைச்சல், பேதி, நாவுலரல், முதலிய வியாதி ஆண்களுக்கும், வயிற்று நோய், தேக வெளுப்பு, சூதக வாய்வு முதலியது பெண் களுக்கும் நேரும். ஆகையால் ஆண் பெண் இருபாலாருமே தன் னிலையறிந்து நடப்பதே கடமையாகும்.

ஓமென்ற மூல கணபதியே காப்பு யுண்மையுடன் நடுமனையி லுகந்து நின்று, ஆமென்ற அமுர்தகலையுட் கொண்டேதா னடங்க வந்த மனோன்மணியின் கிருபையாலே, ஊமென்ற உண்மைதனை மவுனமாக உருப்பெற்று, கருப்பெற்று, உருதிபெற்று, தாமென்ற மதிதனையே ரவியில் தாக்க சச்சுதானந்த மென்ற ஆதிகாப்பாம்.

(தொடரும்)

# பழனி யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

ராஜ வைத்தியர்

## டாக்டர் C. A. ஜெயராம்



அவர்களின்

60 வருட அநுபவ சக்தி
வாய்ந்த

## சித்த மருந்துகள்

**No. 1. நாகபஸ்பம், காட்டுக்கருணை லேகியம்**

& ஸ்பெஷல் மூல முளைக் களிம்பு. நவ மூலங்களையும் நிர்மூலமாக்கும் 24 வேளை மருந்து செட் 1-க்கு ரூ. 7-50

**தங்க ரேக்கு குளிகை**

நாடி நரம்புகளை வலுப்படுத்தும், வீரியம் தரும் 50 குளிகை ரூ. 7-00

**சிட்டுக்குருவி லேகியம்**

வயோதிகத்தை மாற்றி வாலிபம் தரும். இளமை உணர்ச்சி, ஆண்மை தரும். 100 Gram ரூ. 10-00

**பெரிய பவழ பஸ்பம் கலந்த சிவனப்பிரகாஷ்**

எனும் நெல்லிக்காய் லேகியம். சகல உஷ்ணம், வெட்டை, குடற் சூட்டைத் தணித்து ஆரோக்கியம் தரும், 400 Gram ரூ. 6-00

**குன்மாதி செந்தூரம் & குன்ம குடோரி லேகியம்**

அஷ்ட குன்மத்தையும் நீக்கும். பலவருட வயிற்று வலியையும் குணப்படுத்தும். 1 செட் ரூ. 15-00

**பரீக்ஷித்துப் பார்த்தால் பலன் தெரியும்.**

விபரங்களுக்கு எழுதுங்கள் :

**டாக்டர் C. A. ஜெயராம்,**
R. I. M. P.

**டாக்டர் C. A. J. நாகராஜன்**

யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,
பழனி. (SI)

# எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமுமாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னாவது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பயனுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந்திக்க விரும்பினாலும் சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினாலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத்தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், மூட்டி, முதுகு, இடுப்புவலி, நரம்புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்துகளை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம் குறையும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. நெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 50-00
2. நெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 30-00

*விபரங்களுக்கு :*

தலைமை ஆபீஸ் :

## சிவராஜ்
## சித்த வைத்திய சாலை

சிவதாபுரம் போஸ்டு

சேலம் 2

# தி இந்தியன் மெடிகல் பிராக்டீஷனர்ஸ் கூட்டுறவு பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185.

**அடையாறு, மதறாஸ்-20.**

தபால் பெட்டி 907. போன் 71013. 71014

தலைவர் : Dr. V. நாராயணசாமி H.P.I.M.,

உபதலைவர் : M. A. பத்மநாபராவ். L.I.M

**அங்கத்தினராகும் வாய்ப்பு :**

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றும் பட்டம் பெற்ற வைத்தியர்களும்.

2. பஞ்சாயத்து முனிஸிபாலிடி மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும் கழகங்களும்.

3. பிரதம கூட்டுறவு சங்கங்களும் மத்திய கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி ஆயுர் வேத, சித்த, யூனானி மருந்துகளைத் தயார் செய்கிறோம்.

எங்களுடைய மருந்துகளைப் பதிவு செய்யப்பட்ட மருந்து ஷாப்புகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**எமது புதிய வெளியீடுகள் :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வைத்திய யோகரத்னாவளி | (ஆங்கிலம்) | ரூ. | 6—50 |
| 2. | ,, தமிழ் ரூ. 6—00 | (தெலுங்கு) | ரூ. | 6—00 |
| 3. | சித்த பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. | 3—00 |
| 4. | ,, தமிழ் ரூ. 3—00 | (தெலுங்கு) | ரூ. | 3—00 |
| 5. | யூனானி பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. | 3—00 |
| 6. | ,, தமிழ் ரூ. 3—00 | (தெலுங்கு) | ரூ. | 3—00 |
| 7. | ரசரத்ன சமுச்சயம் | (தெலுங்கு) | ரூ. | 10—5 |

தபால் செலவு தனி

**கிளைக் காரியாலயங்கள் :**

1. 20-320 பொட்டி பொட்லவாரி வீதி, கவர்னர்பேட்டை விஜயவாடா (ஆந்திர ராஜ்யம்).
2. 264, காட்டன்பேட்டை பெங்களூர்-2 (மைசூர் ராஜ்யம்)
3. நகர விற்பனை நிலையம் :—4-186 மவுண்ட்ரோட், சென்னை-2.
4. கிளை விற்பனை நிலையம்:—வைஸ்ய ஹாஸ்டல், கச்சிகூடா ஸ்டேஷன் ரோட், ஐதராபாத்.
5. 48, தெற்கு மாசி வீதி, மதுரை 1

Y. கொண்டல் ராவ்,
காரியதரிசி.